(அஜ) ஆற்காடு நகராட்சி, புறவழிச் சாலைப் பணியை முடித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.*

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு தொகுதி, ஆற்காடு நகராட்சிக்கு புறவழிச் சாலை அமைக்கும் பணி கடந்த ஏழு ஆண்டு காலமாக நிலுவையில் இருப்பது குறித்து அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.*

முற்பகல் 11—05

(அஞ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம்–பரங்கிப்பேட்டை நெடுஞ்சாலையை அதிவேகச் சாலையாக தரமுயர்த்தும் பணியைத் தொடங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன் அவர்கள்.*

திரு. துரை. கி. சரவணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தில் விருத்தாசலம் முதல் பரங்கிப்பேட்டை வரை SH–70 என்கிற நெடுஞ்சாலை, அதிவேகச் சாலையாக தரம் உயர்த்தப்பட, 2015 ஆம் ஆண்டு 152 கோடி ரூபாயில் பணிகள் துவங்கப்பட்டு, அது 2018 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அந்தப் பணிகளை ஒப்பந்ததாரர் சரிவர செய்யாத காரணத்தால், அந்தப் பணிகள் நிறுத்தப்பட்டு, ஒப்பந்ததாரரின் பணி ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் முழுமையடையாமல் பாதியளவில் இருக்கின்றன. இதனால், அந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகி வருகிறார்கள். அந்தப் பகுதியில் அடிக்கடி ஏற்படும் விபத்துகளால் கிட்டத்தட்ட 20 நபர்களுக்கும்மேல் இறந்துள்ளார்கள். எனவே, அந்தப் பணிகள் உடனடியாகத் துவங்கப்பட வேண்டுமென்று இந்த அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

(அட) திண்டிவனம் தொகுதி, ஒருங்கிணைந்த பேருந்து வளாகம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.*